<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

எனது வழக்குரையில் 12வது பத்தியில் முதல் பிரதிவாதி அவருடைய தாயாரை சொத்துக்கள் அனைத்தையும் அவருடைய பெயரில் பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக துன்புறுத்தி வந்தார் என்று சொல்லியிருப்பது முற்றிலும் தவறான சங்கதி என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்டதற்கு என் தாயார் மறுத்துவிட்டதால் அவரை 1ம் பிரதிவாதி அசிங்கமான வார்த்தைகளால் பேசி தொடர்ச்சியாக கொடுமை படுத்தி வந்தார் என்று சொல்லியிருப்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் தாயார் சொல்லி தெரியும். மேற்படி சம்பவங்களை 2014 முதல் 2020ம் ஆண்டு வரை தொடர்ச்சியாக செய்து வந்தார். அதனை என் தாயார் எப்பொழுது என்னிடம் சொன்னார் என்றால் மார்ச் 2020ம் ஆண்டில் தான் முதல்முறையாக என்னிடம் சொன்னார். 2014 முதல் 2020ம் ஆண்டு வரை என் தாயார் என்னிடம் வசித்து வந்தாரா என்றால் வருடத்திற்கு 4 முறை என் வீட்டிற்கு வந்து இருந்து விட்டு போவார். ஒவ்வொரு முறையும் 3 முதல் 4 நாட்கள் இருப்பார். நானும், என் மனைவியும் 2014 முதல் 2020 வரை மடிப்பாக்கத்திற்கு சென்று 2 நாட்கள் இருந்து விட்டு வருவோம். அவ்வாறு என் தாயார் என் வீட்டிற்கு வந்து சென்றபோதும், நாங்கள் மடிப்பாக்கத்திற்கு சென்றிருந்தபோதும் என் தாயார், முதல் பிரதிவாதி அவரை கொடுமை படுத்திய விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. உண்மையில் முதல் பிரதிவாதி அவ்வாறு என் தாயாரை கொடுமை படுத்தியிருந்தாலோ, அசிங்கமான வார்த்தைகளால் பேசியிருந்தாலோ என் தாயார் என்னிடம் சொல்லியிருப்பார் என்று சொன்னால் மறுக்கிறேன். வழக்குரையில் 12வது பத்தியில் முதல் பிரதிவாதிக்கு எதிராக சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் இந்த வழக்கிற்காக புனையப்பட்ட சங்கதிகள் என்றால் அதனை நான் மறுக்கிறேன். அவ்வளவு கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு வயதான தாயார் தன்னுடைய மகனுடன் ஒரே வீட்டில் 6 வருட காலமாக வசிக்க முடியாது என்றால் அதை நான் மறுக்கிறேன். என் தாயார் வைத்திருந்த அனைத்து நிரந்தர வைப்பீடுகளிலும் 1வது பிரதிவாதியை நியமனதாரராக வைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளதில், அவ்வாறு எந்த வங்கியில் எடுத்த நிரந்தர வைப்பீடுகளில் தன்னை நியமனதாரராக வைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களுக்கு 1வது

பிரதிவாதியின் பெயரில் தான பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று மிரட்டினார் என்று குறிப்பிட்டுள்ளதில், அதை எப்பொழுது செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மார்ச் 2020ல் என் தாயார் சொன்ன பிறகு எனக்கு தெரியும். பல வெற்று தாள்களிலும், பல வெற்று காசோலைகளிலும் என்னுடைய தாயாரின் கையொப்பத்தை 1வது பிரதிவாதி மிரட்டி வாங்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளதில், அதை எப்பொழுது செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மார்ச் 2020ல் என் தாயார் சொன்ன பிறகு எனக்கு தெரியும். வழக்குரையில் 12வது பத்தியில் குறிப்பிட்டுள்ள மிரட்டி கையொப்பம் வாங்கினார் என்று குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எல்லாம் வழக்கிற்காக புனையப்பட்ட பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. அவ்வாறு 1வது பிரதிவாதி வெற்று காசோலைகளை பயன்படுத்தியிருக்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதியை ஒரு மோசமான நபர் என்று சித்தரிப்பதற்காகவே வழக்குரையில் 12வது பத்தியில் அவ்வாறு 1வது பிரதிவாதியை பற்றி பொய்யான பல விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவை அனைத்தும் பொய்யானவை என்பதால் தான் அந்த சம்பவங்கள் அனைத்தும் எப்பொழுது நடைபெற்றவைகள் என்று என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. ஜுன் 2019ல் தான் என் தாயாருக்கு கர்ப்பப்பையில் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது என்றால் சரிதான். அப்பொழுதே அந்த புற்றுநோய் 4வது stage-யை அடைந்து விட்டது என்றால் சரிதான். புற்றுநோயில் 4வது stage என்பது குணமடைவது என்பது மிகவும் அரிதாக நடக்கக்கூடியது என்றால் சரிதான். பொதுவாக புற்றுநோயில் 4வது stage-யை அடைந்த நபர்கள் ஒரு வருட காலம் தான் உயிருடன் இருக்கும் சூழ்நிலை இருந்து வருகிறது என்றால் 95 சதவீத அவ்வாறு இருக்கும். சென்னை அப்போலோ மருத்துவமனையில் தான் என் தாயாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். ஜுன் 2019 முதல் சென்னை அப்போலோ மருத்துவமனையில் என் தாயாருக்கு சிகிச்சை அளித்தபோது நான் எத்தனை முறை போய் பார்த்தேன் என்றால் 10 முறை போய் பார்த்தேன். மற்ற சமயத்தில் 1வது பிரதிவாதி தான் கவனித்துக்கொண்டார் என்றால் சரிதான். ஜுன் 2019ல் என் தாயாரும், 1வது பிரதிவாதியும் ஒரே வீட்டில் ஒன்றாக தான் இருந்தார்கள் என்றால் சரிதான். என் தாயாருக்கு அப்போலோ மருத்துவமனையில் எவ்வளவு தொகை சிகிச்சைக்காக செலவு செய்யப்பட்டது என்றால்

தோராயமாக ரூபாய் 10 லட்சம் இருக்கும். எவ்வளவு என்று குறிப்பிட்டு தெரியாது. நான் என்னுடைய தாயாருக்கு அடையாரில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கலாம் என்று கருத்து தெரிவித்தேனா என்றால் இல்லை. என் தாயாருக்கு புற்றுநோய் 4வது நிலையில் இருந்ததால் அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை அளித்தால் அதிக செலவாகும் என்பதால் அடையார் புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்கு முடிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் செப்டம்பர் 2019ல் திருத்துறைப்பூண்டியில் இயற்கை மருத்துவம் அளிப்பதற்காக என்னுடைய தாயாரை அழைத்து சென்றேன் என்றால் சரிதான். திருத்துறைப்பூண்டியில் 3 நாட்கள் தங்கினோம். என் தாயாரை ரயிலில் அழைத்து சென்றேன். என் தாயார் ஏற்கனவே உடம்பு முடியாத நிலையில் அவரை காரில் அழைத்து செல்லாமல் ஏன் ரயிலில் அழைத்து சென்றேன் என்றால் ரயிலில் தான் படுத்து கொண்டு செல்லலாம். திருத்துறைப்பூண்டியில் சிகிச்சை அளிக்கும் விவரத்தை யார் எனக்கு தெரிவித்தது என்றால் நான் இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொண்டு அங்கு அழைத்து சென்றேன். அதில் என் தாயாருக்கு முன்னேற்றம் ஏற்பட்டதா என்றால் வலி ஓரளவிற்கு குறைவாக இருந்தது. என்னுடைய தாயாருக்கு கொடுத்த சிகிச்சையை பதிவு செய்தேன். அவரது சிகிச்சையை பதிவு செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் என்னுடைய நினைவிற்காக பதிவு செய்தேன். அந்த காணொலியையும், ரயில் கட்டணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்ததற்கான காரணம் என்னவென்றால் நானும் என் தாயாரை கவனித்தேன் என்பதை நீதிமன்றத்திற்கு தெரிவிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காணொலியை நினைவிற்காக பதிவு செய்யவில்லை என்றும், ஒரு கெட்ட நோக்கத்திற்காக தான் பதிவு செய்தேன் என்றும் சொன்னால் அதை நான் மறுக்கிறேன். நான் என் தாயாருக்கு உண்மையில் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக அவரை திருத்துறைப்பூண்டிக்கு அழைத்து செல்லவில்லை என்றும், குறைவான கட்டணத்தில் ஒரு சிகிச்சை அளித்துள்ளேன் என்றும், நான் என்னுடைய தாயாருக்கு சிகிச்சை அளித்தேன் என்பதை காண்பிப்பதற்காக ஒரு சாட்சியை உருவாக்க வேண்டுமென்று காணொலியை பதிவு செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருத்துறைப்பூண்டிக்கு சிகிச்சைக்கு போகும்போது என் தாயார், என் தம்பியை பற்றி ஏதாவது குறை சொன்னாரா என்றால் குறை சொன்னார். என் வழக்கில் திருத்துறைப்பூண்டிக்கு போகும்

போது என் தம்பியை பற்றி என் தாயார் குறை சொன்னார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. செப்டம்பர் மாத முதல் வாரத்தில் சென்றோம். அந்த சமயத்தில் எனக்கும், என் தாயாருக்கும் சுமூகமான உறவு இருந்ததா என்றால் இருந்தது. நான் திருத்துறைப்பூண்டிக்கு போகும் போது என் தாயார் அவரது பெயரிலுள்ள சொத்துக்களுக்கு என்ன ஏற்பாடு செய்யப்போகிறேன் என்று சொன்னார்களா என்றால் அதை பற்றி சொல்லவில்லை. முதல் பிரதிவாதி 2014ல் இருந்து கொடுமை படுத்தி வருவதால், சொத்துக்கள் குறித்து ஏற்பாடு செய்யலாம் என்று என் தாயார் என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. நான் திருத்துறைப்பூண்டிக்கு போய்விட்டு வந்த பிறகு மீண்டும் என் தாயாரை எப்பொழுது பார்த்தேன் என்றால் ஒரு வாரத்தில் பார்த்தேன். அந்த சமயத்தில் என் தாயார் புற்றுநோய்க்காக கீமோதெரபி சிகிச்சை எடுத்து கொண்டிருந்தார். மேற்படி கீமோதெரபி சிகிச்சை 20 நாட்களுக்கு ஒரு முறை செய்யப்படும். கீமோதெரபி சிகிச்சை எடுக்கும் போது என் சகோதரர் தான் போவார் என்றால் அவரும் போவார், நானும் போவேன். நான் எந்த சமயத்திலும் போகவில்லை என்றும், என் சகோதரர் தான் பார்த்துக்கொண்டு வந்தார் என்றும் சொன்னால் அதை நான் மறுக்கிறேன். நான் என் தாயாரின் மருத்துவ செலவிற்காக அப்போலோ மருத்துவமனையில் எவ்வளவு தொகை செலவு செய்துள்ளேன் என்றால் அப்போலோ மருத்துவமனையில் நான் செலவு செய்யவில்லை. அந்த சமயத்தில் என்னுடைய மாத வருமானம் ஒரு லட்சம் இருக்கும். என் தாயாரின் மருத்துவ செலவிற்கு நான் ஏன் செலவு செய்யவில்லை என்றால் அவர் வேலை செய்த BSNL நிறுவனத்தில் இருந்து மருத்துவ செலவிற்கு பணம் திரும்ப வழங்கப்படும் என்ற காரணத்தினால் நான் எந்த செலவும் செய்யவில்லை. என்னுடைய தாயார் அவருடைய வருமானத்தில் இருந்து எவ்வளவு தொகை செலவு செய்தார் என்றால் ரூபாய் 10 லட்சம். என் தாயார் மேற்படி மருத்துவ செலவிற்காக ரூபாய் 20 லட்சம் செலவு செய்திருக்கிறார் என்றும், நான் என் தாயாரின் உடல்நிலையில் எவ்வித அக்கறையும் எடுத்துக் கொள்ளாததால் தான் அவர் மருத்துவ சிகிச்சைக்காக எவ்வளவு செலவு செய்தார் என்ற விவரம் கூட முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் ஒரு வருடத்தில் இறந்துபோய்விடுவார் என்ற காரணத்தினால் தான் நான் அடையார் மருத்துவமனைக்கு குறைந்த செலவு சிகிச்சைக்கு அழைத்து செல்ல பரிந்துரை செய்தேன்

என்றால் சரியல்ல. அக்டோபர் மாதம் 2019 சமயத்தில் எனக்கும், என் தாயாருக்கு இடையில் சுமூகமான உறவு தான் இருந்தது. அவ்வாறு சுமூகமான சூழ்நிலை இருக்கும்போது 25.10.2019 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஏன் அனுப்பினேன் என்றால் என் தம்பி கொடுத்த அழுத்தத்தை தவிர்ப்பதற்காக நான் அறிவிப்பு கொடுத்தேனே தவிர என் தாயாருக்கு எதிராக அனுப்பவில்லை. அந்த அறிவிப்பில் நான் என்ன கூறியிருந்தேன் என்றால் என் தம்பியின் அழுத்தத்தை பற்றி குறிப்பிட்டு என் வழக்கறிஞரிடம் அறிவிப்பு அனுப்ப சொன்னேன். ஆனால் அவர் என்னிடம் அறிவிப்பின் வரைவு நகலை காட்டாமல் சொத்து விவரத்தையும் சேர்த்து காட்டி அனுப்பிவிட்டார். என் வழக்கறிஞருக்கு பாகப்பிரிவினை கேட்டு அனுப்பும்படி அறிவுறுத்தல் வழங்கவில்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு அவரிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை, வாய்மொழியாக கேட்ட விவரங்களை சொன்னேன். வழக்கறிஞர் அறிவிப்பில் 3 அயிட்ட சொத்துக்களை எதன் அடிப்படையில் என் வழக்கறிஞர் காட்டியுள்ளார் என்றால் நான் வாய்மொழியாக சொன்ன விவரத்தை வைத்து காட்டியுள்ளார். அந்த விவரங்கள் எனது நினைவில் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை என் தாயாரிடம் பாகப்பிரிவினை கேட்டு தான் அனுப்பினேன் என்றும், தற்போது இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அனுப்பியுள்ள அறிவிப்பில் என் தாயாருக்கு குணமாகக்கூடிய நோய் என்று காட்டியுள்ளேன் என்றால் என்னை கலந்துக் கொள்ளாமல் வழக்கறிஞர் அவ்வாறு அனுப்பிவிட்டார். அவ்வாறு ஏன் தவறான தகவல் அனுப்பினீர்கள் என்று என் வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். எப்பொழுது அவ்வாறு கேட்டேன் என்றால் 10 நாட்கள் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பு நகலை பார்த்து அவ்வாறு கேட்டேன். அவ்வாறு தவறாக அனுப்பிய அறிவிப்பிற்கு திருத்தி மற்றொரு அறிவிப்பு அனுப்புமாறு வழக்கறிஞரிடம் கேட்கவில்லை, என் தாயாரிடம் மன்னிப்பு கேட்டேன். என் தாயாரிடம் அடுத்த நாள் போய் அவ்வாறு நான் மன்னிப்பு கேட்டேன். என் தாயார் எனக்கு 21.10.2019ல் எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை நான் படித்து பார்த்தேன். அந்த பதில் அறிவிப்பில் என் தாயார் எனக்கும், என் சகோதரருக்கும் சமமாக பாகம் பிரித்து கொடுப்பேன் என்று கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)